தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

| | | |
|---|---|---|
| **K.**சந்திரசேகரன் | **R.**சந்திரசேகரன். | **E.**சித்தையன் |
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |

சுற்றறிக்கை / 08-2018 02-06-2018

அன்புடையீர்,

வணக்கம். 22-02-2018 அன்று ஏற்பட்ட ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் உறுதியளித்தபடி தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒப்பந்தத்தில் உள்ள கோரிக்கை எண்: 2 ன்படி அஸசர் 2ம் நிலை மற்றும் அஸசர் பொறுப்புகளை ஒன்றாக்கி வாரிய உத்திரவு எண்: 10 நாள்: 18-05-2018 வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் உத்தரவில் அஸசர் II மற்றும் அஸசர் பொறுப்புகளை இணைக்கும் போது ஆண்டுயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்படவில்லை என்று கூறப்பட்டுள்ளது வருத்தமளிக்கிறது. அஸசர் பொறுப்புடன் இணைக்கப்பட்ட சுமார் 1300 அஸசர்கள் பதவி உயர்வுக்கான ஆண்டுயர்வினை இழக்க நேரிட்டுள்ளதால் பெரிதும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

தொழிற்சங்கங்கள் ஒப்பந்தம் போடுவது தொழிலாளர்களுக்கு கூடுதல் பலன்களைப் பெற்றுத்தருவதற்காகத்தான். இயற்கையாக கிடைக்கும் பலன்களை இழப்பதற்கு அல்ல.

ஏற்கனவே 05-05-2016. என குறுமத்தேதி நிர்ணயித்து, தகுதிகாண் அறிக்கையை 04-07-2016ல் கேட்டு, சுமார் 1500 பேரின் தகுதிகாண் அறிக்கை பெற்று, DPC தேதியெல்லாம் முடிவு செய்து, பதவி வழங்கவேண்டிய முதிர்ச்சியான நேரத்தில் ஒப்பந்தம்! மெர்ஜர்! என்றெல்லாம் காரணம் சொல்லி பதவி உயர்வினை நிறுத்திவைத்து, பின்னர் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. மெர்ஜர் செய்தாகிவிட்டது. ஆண்டுயர்வுக்கு கோரிக்கை ஏதும் இல்லை என்று சொன்னால் தொழிலாளர்களுக்கு பாதிப்பு வராதா? ஒப்பந்தம் போடுவதற்கு முன்பே அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கியிருக்க வேண்டும் என்ற உண்மை நிலையை உணர்ந்து அவர்களுக்கு ஆண்டுயர்வு வழங்கிட வேண்டும் என்றும் பதவி உயர்வு கிடைக்காத ஒரு சிலரை நிர்வாகம் மெர்ஜர் செய்து கொள்வதில் ஆட்சேபம் இல்லை என்றும் நிர்வாகத்திற்கு நமது கருத்துக்களை தெரிவித்துள்ளோம்.

நமது கருத்துக்களையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒரு கடிதமாக கொடுக்குமாறும், இதனால் எவ்வளவு செலவாகும் என்ற விவரத்தையும் தருமாறும் கேட்டுள்ளார்கள். விரைவில் விரிவான முறையீடு செய்திட உள்ளோம்.

கோரிக்கை எண்: 6 ன்படி 19 AO/RIS பொறுப்புகளுக்கான அனுமதி இன்னமும் வழங்கப்படவில்லை. தற்போது இருக்கும் வட்டங்களில் எங்கு AO/RIS பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளது, எங்கு வழங்கப்படவில்லை என்ற விவரங்களை முழுமையாக அறிந்த பின் விடுபட்டுப் போன 19 வட்டங்களுக்கு AO/RIS வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.

கோரிக்கை எண்: 8 ன்படி பயிற்சிக்காலம் மூன்று மாதமாக குறைத்திட ஏற்கனவே 16-03-2018ல் உத்தரவு வழங்கப்பட்டுவிட்டது. அது குறித்து சில விளக்கங்களும் 25-05-2018ல் வழங்கப்பட்டுள்ளது.

கோரிக்கை எண்: 9 ன்படி 43 முதுநிலை கணக்கீட்டு அலுவலர் பொறுப்புகள் 27-03-2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிராக பதவிஉயர்வுவழங்கிட குறுமத்தேதி நிர்ணயிப்பது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

கோரிக்கை எண்: 10 ன்படி அதிக வருவாய் ஈட்டும் 156 உபகோட்டங்கள் கண்டறியப்பட்டு அவைகளுக்கு ATO பதவிகள் 03-05-2018ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பொறுப்புகளை பதவி உயர்வு மூலம் நிரப்பிட, 210 வருவாய் மேலாளர்களின் தகுதிகாண் அறிக்கை 25-05-2018ல் கேட்கப்பட்டுள்ளது. குறுமத்தேதி: 01-03-2018.

கோரிக்கை எண்: 22 ன்படி மாற்றுத்திறனாளிகள் மற்றும் 40 வயது நிரம்பிய பெண் அஸசர்கள் பணிமாற்றம் செய்து கொள்ள ஒரு வாய்ப்பு வழங்குவதற்கான உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படவுள்ளது.

ஒப்பந்த நிபந்தனைகள் வ.எண்: 3 ல் உள்ளபடி வேலைப்பளுவுக்கு உட்படாத மத்திய அலுவலகங்களுக்கு பணிப்பகிர்வு மற்றும் பணியாளர் எண்ணிக்கை வரையறுப்பது பற்றி சங்கங்களுடன் விரைவில் பேசிட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளோம்.

விடுபட்டுப்போன இதர கோரிக்கைகள் மீதும் விரைவில் உத்தரவினைப் பெற நடவடிக்கை மேற்கொள்வோம்.

01-01-2003ல் தேர்வு நிலை வருவாய் மேலாளர்களுக்கு ரூ.5,850 –200-11050 க்குப் பதிலாக ரூ.8,100 – 275 – 15,525 வழங்கிட வேண்டும் என்ற நமது சங்கத்தின் கோரிக்கை தொழிலாளர் தீர்ப்பாய்வத்தால் 23-05-2016ல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனை அமுல்படுத்திட வேண்டும் என்று உயர்நீதி மன்றத்தில் ரிட்மனு (WP 11087/2007) தொடுத்துள்ளோம். இதற்கு பதில் மனு நிர்வாகத்தால் இன்னமும் தாக்கல் செய்யப்படவில்லை. இதற்கு இடையில் தொழிலாளர் தீர்ப்பாய்வத்தின் உத்திரவினை இரத்து செய்திட வேண்டும் என்று ஒரு புதிய மனுவினை (WP 8173/2018) நிர்வாகம் தாக்கல் செய்கிறது. இந்த வழக்கு 04-06-2018 அன்று விசாரணைக்கு வருகிறது.

26-05-2018 அன்று சிதம்பரத்தில் நடைபெற்ற சிதம்பரம் கோட்டச் செயலாளர் திரு. அழகேசன், FM. I Gr, அவர்களது மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சங்கத் தலைவர், பொதுச் செயலாளர், நிதிச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். வழியில் கடலூரில் நடைபெற்ற விழுப்புரம் மண்டலக்குழுவில் கலந்து கொண்டு மூவரும் சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் ஊதிய உயர்வு நன்கொடையாக திரு. அழகானந்தம், CSO அவர்கள் தனது ஒருமாத சம்பளப்பலன் ரூ. 16,987ஐ வழங்கினார்.

30-05-2018 அன்று திருப்பத்தூரில் நடைபெற்ற வட்டத்தலைவர் திரு. பாரதி,JE II, அவர்களின் பணிஓய்வு பாராட்டுவிழாவில் பொதுச் செயலாளர் மற்றும் நிதிச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ரூ. 1லட்சம் ஊதிய உயர்வு நன்கொடையாக திருப்பத்தூர் வட்டத்தின் சார்பில் பொதுச் செயலாளரிடம் வழங்கப்பட்டது. இதில் ஒருமாத பலன்தொகையை நன்கொடையாக கொடுத்தவர்கள்:-

| வ.எண். | பெயர் | பதவி | நன்கொடை |
|---|---|---|---|
| 1. | திரு. R. பாண்டியன் | மண்டலச் செயலாளர் | ரூ. 15,000/- |
| 2. | திருமதி. வரலட்சுமி | மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் | ரூ. 15,000/- |
| 3. | திரு. V. பாரதி | வட்டத் தலைவர் | ரூ. 15,000/- |
| 4. | திரு. G. வெங்கடேசன் | வட்டச் செயலாளர் | ரூ. 15,000/- |
| 5. | திரு. A. தேவராஜன் | வட்டப் பொருளாளர் | ரூ. 15,000/- |
| 6. | திரு. கார்த்திகேயன் | வட்டக்குழு உறுப்பினர் | ரூ. 10,000/- |

31-05-2018 வரை மத்திய சங்கத்தில் பெறப்பட்ட ஊதிய உயர்வு நன்கொடை ரூ.7,61,485/-

நமது சங்கத்தின் 2018- 2019 ஆம் ஆண்டுக்கான தேர்தல் அனைத்து கிளைகள், வட்டங்கள், மண்டலங்களில் சிறப்பாக ஜனநாயக முறையில் நடைபெற்று முடிந்துள்ளது. சென்னை வடக்கு, தெற்கு மண்டலத் தேர்தல்கள் மட்டும் பாக்கி உள்ளது. அவைகளும் இம்மாத மூன்றாவது வாரத்திற்குள் முடிந்துவிடும் என்று நம்புகிறோம்.

நமது சங்கத்தின் 182வது மாநில செயற்குழு 23-06-2018 அன்று சென்னையிலும், 63 வது மாநில பொதுக்குழு 15-07-2018 அன்று கடலூரிலும் நடைபெற உள்ளது. இம்மாநில பொதுக்குழுவில் மத்திய சங்க பொறுப்பாளர்கள் தேர்தல் நடைபெறும்.

பெறுநர் : கிளைச்செயலாளர்கள்,கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மத்திய சங்க பொறுப்பாளர்கள்.

நகல் : செய்திமடல்.

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்